# கோவிட்-19 தொற்று பரவல் காலத்தின்போது ப்ராம்ப்ட்டனில் 2021 ஆம் ஆண்டின் ஈஸ்டர் வார இறுதி நாட்கள்

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 25, 2021) – இந்த ஆண்டு நல்ல வெள்ளிக்கிழமை நாளானது, (Good Friday) ஏப்ரல் 2 வெள்ளிக்கிழமை அன்றும், ஈஸ்டர் திங்கட்கிழமையானது ஏப்ரல் 5 திங்கட்கிழமை அன்றும் நிகழ்கின்றன.

தீயணைப்பு மற்றும் அவசரகாலச் சேவைகள், போக்குவரத்துச் சேவைகள், சட்ட அமலாக்கம், சாலைப்பணிகள், POA நீதிமன்றங்கள் மற்றும் பாதுகாப்பு சேவைகள் ஆகியவை உள்ளிட்ட மிக முக்கியமான சேவைகள், நமது சமூகத்தினருக்கு ஆதரவளிப்பதற்காக, வழக்கம்போல் தொடர்ந்து செயல்படும்.

எந்த ஒரு விசாரிப்புக்கும் குடியிருப்புவாசிகள் 311 ஐ அல்லது 905.874.2000 (ப்ராம்ப்ட்டனுக்கு வெளியிலாக), ஐ அழைக்கலாம், Brampton 311 செயலியை (App Store அல்லது Google Playயில் கிடைக்கிறது) உபயோகிக்கலாம், www.311brampton.ca க்கு வருகை தரலாம் அல்லது 311@brampton.ca க்கு மின்னஞ்சல் செய்யலாம். கோவிட்-19 தொற்றுப்பரவல் விசாரிப்புக்கள் உள்ளிட்ட ப்ராம்ப்ட்டன் நகரம் அல்லது பீல் பிராந்தியம் பற்றிய எந்த விசாரிப்புக்களுக்கும் நாங்கள் 24/7 என்னும் முறையில் கிடைக்கபெறுகிறோம். மேலும் தகவல்களுக்கு வருகை புரியவும்: www.brampton.ca/COVID19.

**ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து**

ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவைகள், ஏப்ரல் 2 முதல் 5 வரை பின்வரும் சேவைக அட்டவணைப்படி இயங்கும்.

<u>வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 2 நல்ல வெள்ளிக்கிழமை(Good Friday) நாளில்</u>

ஞாயிற்றுக்கிழமை/விடுமுறை தின அட்டவணைப்படி இயங்கும்.
பேருந்து முனையத்தில் இருக்கின்ற வாடிக்கையாளர்- சேவை கவுன்ட்டர்கள் மூடப்படும். உதவி பெறுவதற்காக தொடர்புக்கான எண்கள் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை செயல்படும்.

<u>சனிக்கிழமை ஏப்ரல் 3</u>

சனிக்கிழமை Operating on a Saturday schedule.
பேருந்து முனையங்களில் இருக்கின்ற வாடிக்கையாளர்-சேவை கவுன்ட்டர்கள் வழக்கமான அலுவலக நேரங்களில் திறந்திருக்கும். உதவி பெறுவதற்கான தொடர்பு எண்கள் காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்படும்.

ஞாயிற்றுக்கிழமை ஏப்ரல் 4 ( ஈஸ்டர் ஞாயிறு)
ஞாயிற்றுக்கிழமை/விடுமுறை தின அட்டவணைப்படி இயங்கும்.
பேருந்து முனையத்தில் இருக்கும் வாடிக்கையாளர்-சேவை கவுன்ட்டர்கள் மூடப்படும். உதவி பெறுவதற்காக தொடர்புக்கான எண்கள் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை செயல்படும்.

திங்கட்கிழமை ஏப்ரல் 5 ( ஈஸ்டர் திங்கட்கிழமை)
வழக்கமான வார நாள் அட்டவணையில் பேருந்துகள் இயங்கும்.
பேருந்து முனையங்களில் இருக்கின்ற வாடிக்கையாளர்-சேவை கவுன்ட்டர்கள் வழக்கமான அலுவலக நேரங்களில் திறந்திருக்கும். உதவி பெறுவதற்கான தொடர்பு எண்கள் காலை 7 மணி முதல் மாலை 9 மணி வரை செயல்படும்.

மேலும் தகவல்களுக்கு தொடர்பு மையத்தை **905.874.2999** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும் அல்லது இந்த வலைதளத்திற்கு வருகை தரவும்: www.bramptontransit.com.

மேம்படுத்தப்பட்ட கால அட்டவணைப்படி பேருந்துகளைத் தூய்மைப்படுத்தி அவற்றில் கிருமிநாசினி தெளிக்கும் வேலை மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு 48 மணிக்கொரு முறை பேருந்துகளின் அனைத்து பரப்புகள், இயக்குபவர் அமருமிடம் மற்றும் அனைத்து இருக்கைகளையும் கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைப்பதே ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையின் இலக்காகும். தற்சமயம் பேருந்துகள் 24 மணிக்கு ஒருமுறை கிருமிநாசினி தெளிக்கப்படுகின்றன. பேருந்து முனையங்கள் மற்றும் நிறுத்தங்களில் உள்ள மேற்பரப்புகளும்கூட தினசரி அடிப்படையில் தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைக்கப்படும்

பேருந்து பயணிகள் முகக் கவசம் அணிந்திருக்கும்போதும் கூட, பேருந்து முனையங்கள், மற்றும் பேருந்து நிறுத்தங்களில் கூடிய மட்டில் உடல்ரீதியான இடைவெளி விடுவதைத் தொடர்ந்து பேணி வருமாறு நகர நிர்வாகம் கேட்டுக்கொள்கிறது. பேருந்து பயணியர் தங்கள் கைவசம் தமது உபயோகத்திற்காக தங்கள் சொந்த கிருமி நாசினி, கைகளைக் கழுவும் சுகாதார பொருட்களை வைத்திருந்து தங்கள் கைகளை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்; இருமும்போதும், தும்மும்போதும் தங்கள் முழங்கையில் முகம் புதைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உங்களுக்கு உடல் நலமில்லாது இருந்தால், பேருந்தில் பயணம் செய்வதைத் தவிர்க்கவும்; அருகாமையில் இருக்கின்ற

கோவிட்-19 மதிப்பீட்டு மையத்தில் சோதனை செய்துகொண்டு, பொது சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பின் வழிகாட்டுதலின்படி, பயணிகள் அனைவரும், வீடுகளிலும் பேருந்து முனையங்களிலும் இருக்கும் போது மருத்துவம் அல்லாத முக கவசங்களையும் உங்கள் மூக்கு வாய் மற்றும் தாடையை மூடி மறைத்தபடி இறுக்கமாக அணிந்திருப்பது கட்டாயம் என்று நினைவூட்டப்படுகிறார்கள். ஆபத்துக்களை கண்காணிப்பதற்காக ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பும் மற்றும் அவசரகால மேலாண்மை அலுவலகமும் நெருங்கி பணியாற்றி வருகிறார்கள்

பொது செய்திகளுக்கு [www.brampton.ca/COVID19](http://www.brampton.ca/COVID19) மற்றும் [www.bramptontransit.com](http://www.bramptontransit.com) க்கு வருகை தரவும் அல்லது சேவை பற்றிய புது செய்திகளுக்கு டுவிட்டரில் @bramptontransit ஐ பின்பற்றவும். கேள்விகள் இருப்பின் ப்ராம்ப்ட்டன் போக்குவரத்து தொடர்பு மையத்தை தொடர்பு கொள்ள வேண்டிய எண் 905.874.2999.

**ப்ராம்ப்ட்டன் பொழுதுபோக்கு**

பன்னி (Bunny EGGScitement) எக்ஸைட்மென்ட்

இந்த ஈஸ்டரின்போது பாதுகாப்பான **ப**ன்னி எக்ஸைட்மெண்ட் இன் பாதுகாப்பான தொகுப்பை உபயோகித்து மகிழவும். கைவினை பொருள் தொகுப்பு ஒன்றை எடுத்துக்கொண்டு ஆன்லைன் பயிற்சி மூலம் வண்ணமயமான தாவரம் கட்டுமானம் செய்து மெய்நிகர் வகையில் முட்டை வேட்டையாடும் பாகத்தில் பங்கு பெறுங்கள் மற்றும் மார்ச் 29 முதல் வண்ணம் தீட்டும் செயல்பாடுகளை பதிவிறக்கிக் கொள்ளுங்கள்.

கேஸ்ஸி கேம்ப்பெல் கம்யூனிட்டி மையம் (Cassie Campbell Community Centre), சிங்க்வாகவ்ஸி ஸ்கி ச்சாலட் (Chinguacousy Park Ski Chalet), கோர் மெடோஸ் சமுதாயக் கூடம் (Gore Meadows Community Centre) மற்றும் சவுத் பிக்சர் ஸ்போர்ட்ஸ் பிளக்ஸ் ஆகிய இடங்களில் தொட்டுக்கொள்ளும் ஆபத்து இல்லாத வகையில், போகிற போக்கில் எடுத்துக் கொள்ளக்கூடிய வகையில் கைவினைப் பொருள் தொகுப்பு மார்ச் 31 முதல் ஏப்ரல் 1 வரை 15:30 இலிருந்து மாலை 7 மணி வரை கிடைக்கும். பொருட்களை எடுத்துக் கொள்ள வரும் போது அறிவிப்பு பலகை மற்றும் பாதுகாப்பு அறிவுறுத்தல்களைக் கடைப்பிடிக்க வும். கைவினைப்பொருள் தொகுப்புக்கள், முதலில் வருபவர்களுக்கு முதலில் கிடைக்கும்; ஒருவருக்கு ஒன்று மட்டுமே கிடைக்கும்; மிகக்குறைந்த சரக்கு இருப்பு காரணமாக சரக்கு தீரும் வரை கொடுக்கப்படும்.

பன்னி (Bunny EGGScitement) எக்சைட்மென்ட் செயல்பாடுகள் பற்றிய மேலும் தகவல்களுக்கு www.brampton.ca/recreation ஐத் தொடர்பு கொள்ளவும்.

வீட்டில் இருந்தபடியே பொழுதுபோக்கு

ஆன்லைன் உடற்பயிற்சி மற்றும் கைவினை பயிற்சிகள் மூலம் வீட்டில் சுறுசுறுப்பாக இருங்கள்! முழு உடல் பயிற்சிக்கு முயற்சிக்கவும், அட்டையில் செய்யப்படும் இதயம் போன்ற வடிவங்களை உருவாக்குவது, உங்கள் கையெழுத்து திறன்களை மேன்மைப்படுத்த பயிற்சி செய்வது மற்றும் பலவற்றைக் கற்றுக் கொள்ளுங்கள். www.brampton.ca/recathome இல் பல்வேறு வகையான ரெக் அட் ஹோம் (Rec At Home )செயல்பாடுகளை அணுகவும்.

ப்ராம்ப்ட்டன் நகர பொழுதுபோக்கு மையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன நேரில் ஆஜராகி பயிற்சியாளர் வழிநடத்தும் புத்துணர்வாக்கல் நிகழ்ச்சிகள் மற்றும் சேவைகளும்கூட, கோவிட்-19 ஊரடங்கு நடவடிக்கைகள் காரணமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன. மெய்நிகர் மற்றும் திறந்தவெளி புத்துணர்வாக்கல் நிகழ்ச்சிகள் மற்றும் சேவைகள் பற்றி அறிய வருகைதரவும்: www.brampton.ca/recreation.

**ப்ராம்ப்ட்டன் நூலகம்**

ஏப்ரல் 2, வெள்ளிக்கிழமையன்று (நல்ல வெள்ளிக்கிழமை) , நூலக கிளைகளில் மற்றும் ஜன்னலோரமாக புத்தகம் எடுத்துச்செல்லும் வசதி கிடைக்காது.

எங்கள் வலைத்தளமாகிய Brampton Library website இல் எந்த வேளையிலும் எங்கள் டிஜிட்டல் நூலகத்திற்கு வருகை தரலாம். டிஜிட்டல் இ-புத்தகங்கள், இ-ஆடியோபுத்தகங்கள், டிவி மற்றும் திரைப்பட ஒளிபரப்பு, ஆன்லைன் கற்றல், கலை மற்றும் கைவினை இவை அனைத்துக்கும், இலவசமாக கிடைக்கும்; உங்கள் நூலக அட்டை மூலமாக இடைவிடாத அணுகலும் கிடைக்கும். ப்ராம்ப்ட்டன் நூலக அட்டை ஒன்றைப் பெற, இங்கு க்ளிக் செய்யவும். அவரவர் விருப்பப்படி புத்தகங்களைத் திருப்பித் தருவதற்காக அனைத்து கிளை நூலகங்களிலும் புத்தகங்களை 24 மணி நேரமும் விட்டுச்செல்வதற்காக பெட்டி வைக்கப்பட்டு நேரம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

நாம் தொடர்பிலேயே இருப்போமாக! எங்கள் மின்னஞ்சல் வழி புதுப்பிப்புக்களுக்கு சந்தாதாரர் ஆகவும் மற்றும் Facebook, Twitter, மற்றும் Instagramஇல் பின்தொடரவும்.

**ப்ராம்ப்ட்டன் விலங்குகள் சேவைகள்**

ப்ராம்ப்ட்டன் விலங்குகள் காப்பகம் நல்ல வெள்ளிக்கிழமையாகிய ஏப்ரல் 2, வெள்ளிக்கிழமையன்று, ஏப்ரல் 4 ஞாயிற்றுக்கிழமை மற்றும் ஏப்ரல் 5 ஈஸ்ட்டர் திங்கட்கிழமை ஆகிய நாட்களில் மூடப்படும். இந்த

காப்பகம் ஏப்ரல் 3 சனிக்கிழமையன்று காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை திறந்திருக்கும் முன்பதிவின் பேரில் மட்டுமே சந்திக்கலாம்.

விலங்குகள் கட்டுப்பாட்டு அமைப்பு திங்கள் முதல் வெள்ளிவரை காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரையும், சனி, ஞாயிற்றுக்கிழமை மற்றும் விடுமுறை நாட்களில் காலை 8 மணி முதல் மாலை 6:30 மணி வரையிலும் சாலைகளில் செயல்படுவார்கள், மற்றும் பின்வரும் அழைப்புக்களுக்கு மட்டுமே செவிசாய்ப்பார்கள்:

- நோயுற்ற/காயப்பட்ட/ஆக்ரோஷமான வீட்டு மற்றும் காட்டு விலங்குகளை பிடித்து செல்லுதல்
- ஆக்ரோஷமான விலங்கு
- சுற்றித்திரியும் நாய்
- நாய்க்கடி விசாரணை
- அடைபட்ட தெருநாயைப் பிடித்து செல்லுதல்
- இறந்து கிடக்கும் விலங்கினை அகற்றுதல்

இந்த நேரங்களுக்கு அப்பால், விலங்குகள் கட்டுப்பாட்டு அமைப்பினர் அவசர நிலைகளுக்கு மட்டுமே செவி சாய்ப்பார்கள்.

**ஈஸ்ட்டர் வார இறுதிக்காக, பீல் ப்ப்ளிக் ஹெல்த் அமைப்பின் நினைவூட்டல்கள்**

உங்கள் குடும்பத்துடன் நெருக்கமாக வசிப்பவர்களுடன் மட்டுமே கூடியிருந்து ஒருவருக்கொருவர் அக்கறை செலுத்துங்கள். தடுப்பூசி செலுத்துதல் ஒருபக்கம் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தாலுமே கூட, நாம் விழிப்பாக இருப்பதை சற்றும் கைவிடலாகாது; தொடர்ந்து பொது சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றுவது அவசியமாகும். இப்படியான செயல்களே இந்த வைரஸுக்கு எதிரான நமது மிகச்சிறந்த தற்காப்பு அரணாகும். உங்கள் வீட்டிற்கு வெளியிலாக இருக்கும் குடும்ப உறுப்பினர்கள் நண்பர்கள் பொருத்தவரை, அவர்களுடன் இணைப்பில் இருக்க ஏராளமான புகைப்படங்கள் எடுங்கள் மற்றும் சமூக விலகலைக் கடைப்பிடியுங்கள். தொற்று பரவலைக் குறைப்பதற்காக, நீங்கள் வழிபாடு செய்யும் இடங்களில் மெய்நிகர் சந்திப்புக்கு வேண்டுகோள் வையுங்கள். அப்படியும் நீங்கள் கூடித்தான் ஆகவேண்டும் என்றால், தயவு செய்து மத சார்பான நிகவுகளில் கூடும் கூட்டத்தைக் குறைப்பதற்கான வரம்புகளை பின்பற்றுங்கள்.

**ப்ராம்ப்ட்டன் நகர ஊடகத் தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு

-30-

ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca

**பீல் பிராந்திய ஊடகத் தொடர்பு**
ஆஸ்லீ ஹாக்கின்ஸ்
தகவல் பரிமாற்ற சிறப்பியலாளர் – பொது சுகாதாரம்
பீல் பிராந்தியம்
416.818.4421 | ashleigh.hawkins@peelregion.ca